මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் அமைச்சு
MINISTRY OF FINANCE AND PLANNING

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01 Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: 2484500, 2484600, 2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11 - 2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: PF/R/3/Security
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2010.08. 12

**அரச நிதிச் சுற்றறிக்கை இல: 445**

அமைச்சுக்களின் அனைத்து செயலாளர்களுக்கும்
மாகாணசபைகளின் பிரதான செயலாளர்களுக்கும்
திணைக்களங்களின் தலைவர்களுக்கும்
மாவட்ட செயலாளர்களுக்கும்
பிரதேச செயலாளர்களுக்கும்
அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகள் மற்றும்
அரச வங்கிகளின் தலைவர்களுக்கும்.

**அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச்சட்டசபைகள் அரச வங்கிகள் மற்றும் அரசிற்கு சொந்தமான கம்பனிகள் ஆகியவற்றிற்கு பாதுகாப்புச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்.**

அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச துறைசார்ந்த நிறுவனங்கள் ஆகியனவற்றிற்கு திறனுள்ள, ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட மற்றும் செயற்திறனுள்ள பாதுகாப்புச் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் முக்கியத்துவம் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. அரசிற்குச் சொந்தமான/அரச துணைநிறுவனக் கம்பனிகளான Rakna Arakshaka Lanka Ltd. மற்றும் L.R.D.C. Services (Pvt.) Company Ltd. ஆகிய இவையிரண்டும் குறிப்பிட்ட அரசதுறையைச் சார்ந்த நிறுவனங்களுக்கான பாதுகாப்புச் சேவைகளை ஏற்கனவே வழங்கி வருகின்றன.

(2) பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் அரச கம்பனிகளிடம் பாதுகாப்புத் துறை தொடர்பான அநுபவமுள்ள பதவிநிலையினர் இருப்பதனால், தனியார் கம்பனிகளிடமிருந்து பாதுகாப்புச் சேவைகளை எதிர்பார்க்கும் அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச்சட்டசபைகள் மற்றும் அரச வங்கிகள் தனியார் கம்பனிகளிடமிருந்து அவ்வாறான சேவைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு முன்பதாக/தற்போது நடைமுறையிலிருக்கும் சேவை ஒப்பந்தங்களை புதுப்பிக்கும் முன்னர் அரசிற்குச் சொந்தமான பாதுகாப்புச் சேவைக் கம்பனிகளிடமிருந்து அவர்களால் அவ்வாறான சேவைகளை வழங்க இயலுமாவென்பதை முன்விசாரணைகள் மூலம் அறிந்து கொள்ளல் வேண்டும்.

(3) இதற்கமைவாக, அரசிற்குச் சொந்தமான கம்பனிகளிடமிருந்து முன்விசாரணைகளை மேற்கொண்ட பின்னரே பிற நிறுவனங்களிடமிருந்து உங்கள் அமைச்சுக்கள்/திணைக்களங்கள்/நிறுவனங்களுக்குத் தேவையான பாதுகாப்புத் தேவைகளை பெற்றுக் கொள்ளல் வேண்டும். மேலும், தனியார் பாதுகாப்புச் சேவைகளை தெரிந்தெடுக்கும்போது அவ்வாறான சேவைகளின் தரங்களினதும் செலவினம் மீதான கவனமும் செலுத்தப்படல் வேண்டும்.

ஒப்பம்: பீ.பி. ஜயசுந்தர,
திறைசேரிச் செயலாளர்.